முதன்மை மாவட்ட நீதிமன்றம், தேனி

முன்னிலை-திரு. எஸ்.செந்தில் குமரேசன், பி.காம்., எம்.எல்.,
முதன்மை மாவட்ட நீதிபதி, தேனி.

*2018-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 21ம் நாள் செவ்வாய்க்கிழமை.*

*<u>அசல் வழக்கு எண். 19/2016</u>*

தெய்வஜோதி ... வாதி

/எதிரிடை/

1) பாலகிருஷ்ணன்
2) முருகேசன்
3) புவனேஷ்வரி
4) கமலா
5) உமா
6) விஜி என்ற விஜயலெட்சுமி
7) அருண்குமார்
8) K. செல்லத்துரை ... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது இதுநாள்வரையில் பரிசீலனையில் இருந்து வந்து, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.செள.பாலாஜி அவர்கள் முன்னிலையாகியும், 1, 2, 3 மற்றும் 8 பிரதிவாதிகள் தரப்பில் திரு.R.உமாபதி அவர்கள் முன்னிலையாகியும், 4, 6 மற்றும் 7 பிரதிவாதிகள் தரப்பில் திரு.P.S.கணேஷ் அவர்கள் முன்னிலையாகியும், 5ம் பிரதிவாதிக்காக வாதி தரப்பில் படி செலுத்தாததால் 5ம் பிரதிவாதியைப் பொறுத்து தள்ளுபடி செய்யப்பட்டு, இன்று 21.08.2018ம் தேதி இவ்வழக்கானது விசாரணக்கு வந்தபோது, வாதி தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லாததாலும், வாதியை அழைத்தும் ஆஜராகாததாலும், இந்நீதிமன்றம் இன்று பிறப்பித்திடும்....

<u>தீர்ப்புரை</u>

வழக்குரைச் சொத்துக்களில் வாதிக்கு சுருளியாண்டிக்கோனார் பாகத்திற்கு உரிய 1/2 பாகத்தில் 1/4 பாகத்தினை தனித்து நயமிடர் பார்த்து பிரித்து சுவாதீனம் ஒப்படைக்குமாறு, ஓர் முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கும்படியும், தவறினால் சமூகம் கோட்டார் அவர்கள் நீதிமன்ற

ஆணையர் ஒருவரை நியமனம் செய்து, வழக்குரைச் சொத்துக்களை அளவீடு செய்து வாதிக்குரிய பாகத்தினை நிர்ணயம் செய்து, தனித்த சுவாதீனம் கொடுக்கும்படி ஓர் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கும்படியும், இவ்வழக்கு முடியும் வரை பிரதிவாதிகள் யாதொரு ஈடு, ஒத்தி மற்றும் கிரையம் போன்ற இதர வில்லங்கங்கள் செய்யக்கூடாது என ஒரு உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்கும்படியும், இவ்வழக்கின் செலவு தொகையினை வாதிக்கு பிரதிவாதிகள் செலுத்தும்படியும், கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கானது *21.08.2018*ம் தேதியன்று, இந்நீதிமன்றத்தில் விசாரணைக்காக அழைக்கப்பட்டபோது, வாதி தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லை. வாதியை அழைத்தும் ஆஜரில்லை. எனவே இவ்வழக்கானது தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

*2018*-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் *21*ம்நாள் செவ்வாய்க்கிழமை என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.

முதன்மை மாவட்ட நீதிமன்றம், தேனி
அசல் வழக்கு எண்.*19/2016*
தீர்ப்புரை
நாள்-*21.08.2018*

முதன்மை மாவட்ட நீதிமன்றம், தேனி

முன்னிலை-திரு. எஸ்.செந்தில் குமரேசன், பி.காம்., எம்.எல்.,
முதன்மை மாவட்ட நீதிபதி, தேனி.

2018-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 21ம் நாள் செவ்வாய்க்கிழமை.

அசல் வழக்கு எண். 19/2016

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கம்பம் நகர், உத்தமபுரத்தில், புதுப்பள்ளிவாசல் தெருவில் யாதவர் தெரு, கதவிலக்கம் 98/7ல் குடியிருந்து வரும் மணிகண்டன் மனைவி, இந்து, சுமார் 38 வயதுள்ள தெய்வஜோதி

... வாதி

/எதிரிடை/

1) தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கம்பம் நகர், உத்தமபுரத்தில், புதுப்பள்ளிவாசல், நேருஜி தெருவில் வசிக்கும் லேட். சுருளியாண்டி கோனார் குமாரர், இந்து சுமார் 56 வயதுள்ள பாலகிருஷ்ணன்.

2) தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கம்பம் நகர், உத்தமபுரத்தில், புதுப்பள்ளிவாசல், நேருஜி தெருவில் வசிக்கும் லேட். சுருளியாண்டி கோனார் குமாரர், இந்து சுமார் 48 வயதுள்ள முருகேசன்.

3) மதுரை-625001, தெற்கு கிருஷ்ணன் தெருவில் 4வது சந்தில் கதவிலக்கம் 3024ல் வசிக்கும் லேட் கண்ணன் மனைவி இந்து சுமார் 44 வயதுள்ள புவனேஷ்வரி.

4) தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கம்பம் நகர், உத்தமபுரம் கிராமம், கம்பம் மெட்டு ரோட்டில் வசித்து வந்து தற்போது மதுரை-625107 ஒத்தக்கடை அஞ்சல், ராஜகம்பீரத்தில் கதவிலக்கம் 202, TNAR நகரில் (ஒருங்கிணைந்த பத்திரப்பதிவு அலுவலகம் அருகில்) வசித்து வரும் லேட்.ரெங்கசாமி கோனார் மகள், இந்து, சுமார் 43 வயதுள்ள கமலா.

5) தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கம்பம் நகர், உத்தமபுரம் கிராமம், கம்பம் மெட்டு ரோட்டில் வசித்து வந்து தற்போது மதுரை-625107 ஒத்தக்கடை அஞ்சல், ராஜகம்பீரத்தில் கதவிலக்கம் 202, TNAR நகரில் (ஒருங்கிணைந்த பத்திரப்பதிவு அலுவலகம் அருகில்) வசித்து வரும் லேட்.ரெங்கசாமி கோனார் மகள், இந்து, சுமார் 43 வயதுள்ள உமா.

6) தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கம்பம் நகர், உத்தமபுரம் கிராமம், கம்பம் மெட்டு ரோட்டில் வசித்து வந்து தற்போது மதுரை-625107 ஒத்தக்கடை அஞ்சல், ராஜகம்பீரத்தில் கதவிலக்கம் 202, TNAR நகரில் (ஒருங்கிணைந்த பத்திரப்பதிவு அலுவலகம் அருகில்) வசித்து வரும் லேட்.ரெங்கசாமி கோனார் மகள், இந்து, சுமார் 41 வயதுள்ள விஜி என்ற விஜயலெட்சுமி.

7) தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கம்பம் நகர், உத்தமபுரம் கிராமம், கம்பம் மெட்டு ரோட்டில் வசித்து வந்து தற்போது மதுரை-625107 ஒத்தக்கடை அஞ்சல், ராஜகம்பீரத்தில் கதவிலக்கம் 202, TNAR நகரில் (ஒருங்கிணைந்த பத்திரப்பதிவு அலுவலகம் அருகில்) வசித்து வரும் லேட்.ரெங்கசாமி கோனார் மகன், இந்து, சுமார் 38 வயதுள்ள அருண்குமார்

8) தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கம்பம் டவுன், 19வது வார்டு, வரதராஜபுரம் கிழக்குத் தெரு, பாரதியார் நகர், காளவாசல் தெற்கு 3வது தெரு, கதவு எண்.28ல் வசிக்கும் கல்யாணித்தேவர் குமாரர் இந்து, சுமார் (Full aged) வயதுள்ள K. செல்லத்துரை.

... பிரதிவாதிகள்

வழக்குரைச் சொத்துக்களில் வாதிக்கு சுருளியாண்டிக்கோனார் பாகத்திற்கு உரிய 1/2 பாகத்தில் 1/4 பாகத்தினை தனித்து நயமிடர் பார்த்து பிரித்து சுவாதீனம் ஒப்படைக்குமாறு ஓர் முதல்நிலை தீர்ப்பாணை பிறப்புவிக்கும்படிக்கும், தவறினால் சமூகம் கோட்டார் அவர்கள் நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்து, வழக்குரைச் சொத்துக்களை அளவை செய்து வாதிக்குரிய பாகத்தினை நிர்ணயம் செய்து, தனித்த சுவாதீனம் கொடுக்கும்படி ஓர் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்புவிக்கும்படிக்கும், இவ்வழக்கு முடியும் வரை பிரதிவாதிகள் யாதொரு ஈடு, ஒத்தி, கிரையம் போன்ற யாதொரு இதர வில்லங்கங்கள் செய்யக்கூடாது என ஒரு உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்புவிக்கும்படிக்கும், இவ்வழக்கின் செலவு தொகையினை வாதிக்கு பிரதிவாதிகள் செலுத்தும்படிக்கும் கோரி வாதி தரப்பில் C.P.C. Order 7 Rule 1ன்கீழ் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>வழக்கு கோப்பு நாள்-</u> *18.03.2016.*

<u>வழக்குமூலம்-.</u> 18.11.2011 and 29.11.2014 ஆகிய தேதிகளில் இந்நீதிமன்ற அதிகார எல்லைக்குள்பட்ட தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கம்பம் நகர், காமயகவுண்டன்பட்டி கிராமத்தில் உற்பத்தி.

**<u>நீதிமன்ற முத்திரைக் கட்டண விபரம்</u>**

தாவா சொத்தின் மொத்த மதிப்பு ரூபாய்.85,00,000.00. இதில் வாதியின் மதிப்பு ரூ.10,62,500/-க்கு மொத்த நீதிமன்றக் கட்டணம் ரூபாய்.750/- **TNCF Act 37(2)**-ன்படியும், உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு ரூபாய்.75.50 **TNCF Act 27(c)**-ன்படியும் சேர்த்து மொத்தம் ரூபாய்.826/- செலுத்தப் படுகின்றது.

இவ்வழக்கானது இதுநாள்வரையில் பரிசீலனையில் இருந்து வந்து, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.சௌ.பாலாஜி அவர்கள் முன்னிலையாகியும், 1, 2, 3, 8ம் பிரதிவாதிகள் தரப்பில் திரு.**R.**உமாபதி அவர்கள் முன்னிலையாகியும், 4, 6, 7ம் பிரதிவாதிகள் தரப்பில் திரு.**P.S.**கணேஷ் அவர்கள் முன்னிலையாகியும், 5ம் பிரதிவாதிக்காக வாதி படி செலுத்தாததால் 5ம் பிரதிவாதிக்கு எதிராக இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு, இன்று 21.08.2018ம் தேதி இவ்வழக்கானது விசாரணக்கு வந்தபோது, வாதி தரப்பில் எவ்வித பிரதிநிதித்துமும் இல்லாததாலும், வாதியை அழைத்தும் ஆஜராகாததாலும், இந்நீதிமன்றம் இன்று பிறப்பித்திடும்....

**<u>தீர்ப்பாணை</u>**

1) வாதி தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லாததாலும், வாதியை அழைத்தும் ஆஜரில்லாததாலும், வாதியின் வருகை தவறுகைக்காக, இந்த வழக்கானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

2) செலவுத் தொகை இல்லை.

**<u>சொத்து விபரம்</u>**

*1)* பெரியகுளம் ரிடி, கம்பம் சப்டி, உத்தமபாளையம் வட்டம், கம்பம் கிராமம், பட்டா எண்.*1788*க்கு சம்மந்தப்பட்ட சர்வே எண்.*1557*ல் *0.13.50* ஏர்ஸ் மற்றும் சர்வே எண்.*1558*ல் 0.76.50 ஏர்ஸ் ஆக மொத்தம் 0.90.00 ஏர்ஸ் நிலமும்,

*2)* பெரியகுளம் ரிடி, கம்பம் சப்டி, உத்தமபாளையம் வட்டம், கம்பம் கிராமம், பட்டா எண்.*527*க்கு கட்டுப்பட்ட சர்வே எண்.*1556*ல் *1.29.00* ஏர்ஸ் மற்றும் சர்வே எண்.*481*ல் 0.35.50 ஏர்ஸ் ஆக மொத்தம் *1.54.50* ஹெக்டேர் நிலமும்,

*3)* பெரியகுளம் ரிடி, கம்பம் சப்டி, உத்தமபாளையம் வட்டம், கம்பம் கிராமம், பட்டா எண்.*2211*க்கு கட்டுப்பட்ட சர்வே எண்.*1558*ல் *0.08.50* ஏர்ஸ் நிலமும்,

*4)* பெரியகுளம் ரிடி, கம்பம் சப்டி, உத்தமபாளையம் வட்டம், காமயகவுண்டன்பட்டி கிராமம், பட்டா எண்.*2157*க்கு சம்பந்தப்பட்ட நஞ்சை நிலம் சர்வே எண்.*373*ல் 0.50.50 ஏர்ஸ் உள்ள நிலமும், மேற்படி நிலங்களுக்கு உரிய சகல பாதை மற்றும் வசதியுரிமை அடிப்படையிலான உரிமை மற்றும் பாத்தியங்களும் சேர்ந்ததில் வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் பாக சொத்து மட்டும்.

5) தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கம்பம் நகர், டவுன் சர்வே எண்.*12* உட்பிரிவு *3*க்கு சம்மந்தப்பட்ட 3950 சதுர மீட்டரில் உள்ள மனையிடமும், அதைச் சார்ந்த அனைத்து உரிமை மற்றும் பாத்தியங்களும் மற்றும் பொதுக் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட இதில் துலக்கப்படாத சொத்துக்களும் மனைகள் மற்றும் இதர பாத்தியங்களும் சேர்ந்து.

*2018*-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் *21*ம் நாள் செவ்வாய்க்கிழமை என்னால் கையொப்பமிடப்பட்டு, இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.

முதன்மை மாவட்ட நீதிமன்றம், தேனி

<u>அசல் வழக்கு எண் *19/2016*</u>

நிறைவேற்றாணை

நாள்-*21.08.2018*